## திருமாலையாண்டான்
## வாழி திருநாமம்

அம்புவியில் ஆளவந்தார் அடி இணையோன் வாழியே
ஆரியனாம் அவர் பதத்தை அன்பு செய்தோன் வாழியே
வெம்பி வரும் வாதியரை வேர் களைந்தோன் வாழியே
மேதினியில் நாலூர் விளங்க வந்தோன் வாழியே
எம்பெருமானார் எதிராசற்கு ஈடுரைத்தான் வாழியே
ஏற்றமுள்ள மாசி மகம் இலங்க வந்தோன் வாழியே
வம்பவிழும் சோலை மலை வாழ வந்தோன் வாழியே
மாலாதராரியன் தாள் மாநிலத்தில் வாழியே

வீசு புகழ் சங்காழி விளங்கு புயம் வாழியே
விண்ணுயர்ந்த மலை அழகர் விரும்புமவன் வாழியே
மாசி மகம் இப்புவியில் வந்துதித்தோன் வாழியே
மறைப் பொருளை உடையவர்க்கு வகுத்துரைத்தான் வாழியே
காசிப நற்குலத்துதித்த கருணை நிதி வாழியே
கையாழி சங்கிதனால் கதி தருவோன் வாழியே
தேசு புகழ் ஆளவந்தார் திருவடியோன் வாழியே
திருமாலையாண்டான் தாள் செகதலத்தில் வாழியே

---